# ஆய்வுக் களஞ்சியம்




பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்ரி

தமிழ்த்துறை

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'A' தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர் : **செல்வி ம.காயத்ரி**

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

# தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம்

**மு.காமராஜ்,**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

---

தமிழர்களின் நாட்டுப்புறக் கலைகள் மிகப் பழமையானவை. நாட்டுப்புறக் கலைகளைப் 'பாரம்பரியக் கலை' என்றும், 'கிராமியக் கலை' என்றும், 'பட்டித் தொட்டிக்கலை' என்றும் நாட்டுப்புற மக்கள் அழைத்து வருகின்றனர். நாட்டுப்புறக் கலைகள் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தவையேயாகும். பெரும்பாலும் இவை பொழுது போக்கிற்காகவும், சமூக அவலங்களைச் சுட்டிக் காட்டுவதற்காகவும் கலைத்திறனை வளர்க்க வேண்டியும் உதவி வருகின்றன. நாட்டுப்புறக் கலைகள் கூத்து, இசை, பாட்டு முதலானவற்றையும், நாட்டுப்புற மக்களையும் பிரித்துப் பார்க்க முடியாது. இக்கலைகள் தமிழர்களின் பாரம்பரியத்திறனையும், பண்பாட்டுச் சிறப்பினையும் நாட்டுப்புறக் கலைகள் வெளிப்படுத்திக் கொண்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கட்டுரையில் தமிழகத்தில் இன்றளவும் விளங்கும் நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளின் வகைகளையும், அவற்றுள் சிலம்பாட்டக் கலையின் தோற்றம் குறித்தும் வகைகள் குறித்தும் மேற்கொள்ளப்படுகிறது.

தமிழக நாட்டுப்புறக் கலைகளில் நிகழ்த்துக் கலைகள் பல வகையுண்டு. நாட்டுப்புறங்களில் ஒரு சில குறிப்பிட்ட இனத்தவர்களால் நிகழ்த்தப்படுபவையேயாகும். ஒவ்வொரு கலைக்கும் ஒவ்வொரு சிறப்புண்டு. அவற்றுள் தனித்தனியே மதிப்புண்டு. இன்று தமிழகத்தில் பரவலாக இருக்கும் நிகழ்த்துக் கலைகள் சிலவே. இவை ஒரு காலத்தில் வெவ்வேறு நோக்கங்களாக உருவாக்கப்பட்டு காலப்போக்கில் செழுமைபடுத்தப்பட்டு நிகழ்த்துக் கலைகள் ஆயின. இன்றைய நவீன காலக்கட்டத்தில் பொது ஊடகங்களின் வாயிலாக கிராமந் தோறும் உள்ள கலை வடிவங்கள் கூட அனைவரும் அறியும் வண்ணம் வெளிக்காட்டப்பட்டு வருகின்றன.

## திருவிழாக் காலங்களில் நிகழ்த்துக் கலைகள்

நாட்டுப்புறங்களில், நாட்டுப்புறத் திருவிழாக்கள், குலதெய்வத் திருவிழாக்கள், பண்டிகைக் காலங்கள், அறுவடைக் காலங்கள், திருமணம், சீர்வரிசை, காதணிவிழா முதலிய சடங்குகளின் போதும் நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள் இடம்பெற்று வருகின்றன. கோவில் திருவிழாக்கள் நாட்டுப்புற நிகழ்த்துக்கலைகள் நிகழ்த்துவதற்குக் களம் அமைத்துத் தருகின்றன.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு வகையான நாட்டுப்புற ஆட்டக்கலை வடிவங்கள் வழக்கில் இருந்து வருகின்றன. சிலம்பாட்டம், காவடியாட்டம், கரகாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், தப்பாட்டம், கும்மியாட்டம், கோலாட்டம், தேவராட்டம், சேவையாட்டம், புலியாட்டம், குறவன் குறத்தி ஆட்டம், மாரடிப்பு ஆட்டம், மயிலாட்டம், நையாண்டி மேளாட்டம், கைச் சிலம்பாட்டம், சலங்கையாட்டம், கோமாளி ஆட்டம், சாமியாட்டம், உருமியாட்டம் என்று பலவகையான நிகழ்த்துக்கலை என்கிற ஆட்டக்கலைகள் தமிழகத்தில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. நாட்டுப்புற நிகழ்த்துக்கலைகள் நாட்டுப்புறங்களில் விடிய விடிய நிகழ்த்தப்பட்டு வருகின்றன. மிகச்சிறந்த கலை வடிவங்களாக நாட்டுப்புற ஆட்டக்கலைகள் விளங்குகின்றன. நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள் தமிழகம் மட்டுமின்றி பிற பல்வேறு மாநிலங்களில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

## நிகழ்த்துக் கலைகளும் இசையும்

நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள் நாட்டுப்புற மக்களால் உருவாக்கப்பட்டவை. தலைமுறை தலைமுறையாகத் திறந்தவெளி அரங்குகளில் நிகழ்த்தப்பட்டு வருபவை நாட்டுப்புற இசையைத் தவிர்த்து நாட்டுப்புறக் கலைகள் நிகழ்த்தப்படுவதில்லை. நாட்டுப்புற ஆட்டமும், இசையும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போல இணைந்தே இருப்பவை பெரும்பாலான கிராமியப் பாடல்கள் முரசு முழக்கத்தோடு பாடப்படுவதால் அவைகளின் சந்தங்களும் உயர்ந்த இசை நயத்துடன் அமைக்கப்பட்டிருந்தன.

நாட்டுப்புறக் கலைகள் அனைத்துமே, தன்னிலை அற்றவை தாமாகவே தோன்றியவை மக்களின் வாழ்வில் ஆதாரமாக வேரூன்றியவை இக்கலைகள் சுதந்திரமாக இயல்பாக, நாட்டுப்புற மக்களின் சமூக வாழ்க்கையோடு நிகழ்த்துக்கலைகளும் இசையும் பிரிக்க முடியாதவாறு இணைந்தே இன்பமளிக்கின்றன.

## சிலம்பாட்டம்

'சிலம்பம்' என்ற சொல்லுக்குச் 'சிலம்பல்' என்று கொருள். கம்பு, வாள், ஈட்டி, சுருள், தீப்பந்தம், குறுங்கம்பு, கத்தி, ரிப்பன் வரிசை, தராசு, ஆளேற்று போன்ற ஆயுதங்கள் மோதும்போது ஏற்பட்ட 'கணீர்'

என்ற ஓசையினாலும் 'கிர்' கற்றொலி ஓசையினாலும், 'கிர் கிர் வென' வேக வீச்சொலியினாலும் 'சிலம்பம்' எனப்பெயர் ஏற்பட்டது.

குறிஞ்சி, முல்லை நிலங்களில் வாழ்ந்த மக்கள் நீண்ட கம்புகளைப் பயன்படுத்தினர். முல்லை நில மக்கள் காட்டு விலங்குகளிடமிருந்து தங்களாக ஆடு மாடுகளைப் பாதுகாக்கவும், கள்வர்களிடமிருந்து தங்களைப் பாதுகாக்கவும் கம்புகளைப் பயன்படுத்தியுள்ளனர். எனவே சிலம்பாட்டம் குறிஞ்சி, முல்லை நிலங்களில் தோன்றியது.

திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் கிடைத்த அகழாய்வின் படி பார்க்கும் போது சிலம்பாட்டம் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பெருவழக்காக இருந்தது தெரியவருகிறது.

**சிலம்பாட்ட முறைகள்**

குறிஞ்சி, முல்லை நில மக்கள் விலங்கள் போரிடும் முறைகளைக் கூர்மையாக ஆராய்ந்து சிலம்பாட்ட முறைகளை உருவாக்கினார் எனலாம்.

'வீச்சு' இது யானைகள் துதிக்கையைச் சுழற்றும் முறைகளிலிருந்து உருவானது.

'முடி' – தடுத்தல் - இது புலிகள் போரிடும் முறைகளிலிருந்து உருவானது.

'இடி' - இது செம்மறியாடு பாய்ந்து முட்டுவது போன்று இடி கம்புடன் எதிரியின் மீது மூர்க்கத்தனமாகப் பாய்ந்து இடித்தல்.

'பூட்டு' இது சிலம்பத்தில் எதிரி தளர்ந்திருக்கும் போதோ அல்லது சிம்பவீரன் தன் திறமையான செயல்பாடுகளினாலோ எதிரியைப் பூட்டுச் செய்து திணறடிக்கலாம். பூட்டுக்கள் யானையின் செயல்பாடுகளிலிருந்து தோன்றின.

'கட்டு' - இது மலைப்பாம்பு. தான் இரையைச் சுருட்டிப் பிடிக்கும் முறையிலிருந்து உருவானது எனலாம்.

**சிலம்பாட்டத்தின் வகைகள்**

தமிழக நிகழ்த்துக் கலைகளில் தாய்க்கலையான சிலம்பாட்டம் முதன்மையானதாகவும், மிகவும் பழமையானதாகவும் அமைகிறது. தமிழகத்தில் வடமாவட்டங்களிலும், தென்மாவட்டங்களிலும் பரவலாக இருந்துவரும் சிலம்பாட்டக் கலையின் வகைகளை ஒவ்வொரு பகுதிகளிலும் ஒவ்வொரு எண்ணிக்கையின் அடிப்படையில் வகைப்படுத்தியுள்ளனர். நாட்டார் வழக்காறுகளில் பெயர்களும், வகைப்பாடுகளும் மாறியிருந்தாலும் கலையென்னவோ? ஒன்று தான் என்று உணரலாம்.

சிலம்பாட்டத்தில் ஒத்தச்சுவடு, மரிவுச்சுவடு, ரெட்டு வீச்சு, ஆயுதமுறை, பூட்டுப்பிரிவு, மடு, சிரமம், எடுத்தெறிதல், நெடுங்கம்படி,

குறுதடி போன்ற முறைகள் இடம்பெறுகின்றன. சிலம்பாட்டத்தில் 64 ஆசனங்களை உடைய அங்கச்சுவடு, ஒத்தைச்சுவடு, நிலையங்கம், அமர்த்தங்கம், தெக்கன் சுவடு, வடக்கன் சுவடு, பொன்றுச்சுவடு, தேங்காய்ச்சுவடு, குதிரைச் சுவடு, காப்புக் கட்டிச்சுவடு, முக்கோணச்சுவடு, வட்டச்சுவடு, மிச்சைச்சுவடு, சர்ச்சைச்சுவடு போன்றவைகள் உண்டு.

மேலும், ஓரடிநிலை, ஈரடிநிலை, மூவடிநிலை, நான்காம் காலடி வரிசை, நாலாங்கால் வலச்சுற்று, நாலாங்கால் இடச்சுற்று, நாலாங்கால் வல அமர்ச்சுற்று, நாலாங்கால் இட அமர்ச்சுற்று, நாலங்கால் பெரளி, நாலாங்கால் வல இடது பெரளி, செண்டிப்பு, வலச்செண்டிப்பு, இடச்செண்டிப்பு, கிறுக்கி நிலை, வடகிறுக்கிநிலை, இடகிறுக்கிநிலை, சருக்கு நிலை, வடச்சருக்குநிலை, இடச்சருக்குநிலை, மூன்றாம் சருக்கு (இடது, வலது) நான்காம் சருக்கு (இடது, வலது), பாவலா நிலைகள், புலிப்பாவலா முன்னேறு பாவலா, பின்னிரங்கு பாவலா நிலைகள் என சிலம்பந்தொடாமலேயே வெறுமனையாகவே கை, கால், உடலசைவு கொண்டே நிகழ்த்தப்படும். இவ்வகைகளல்லாமல் சிலம்பம் எடுக்கும் முறை குருவணக்கம் (சலாம்). குருவின் அடிதொழில் கம்பு சுழற்றும் முறை என்பனவற்றை தொடர்ந்து, எண்ணற்ற வகைப்பாடுகள் உள்ளன. இவற்றோடு அடிவரிசை தொடுவரிசை, சூழல் வரிசை, அறுப்பு, தொடுப்பு, எடுப்பு, படைவீச்சு, கத்தரி, தலைவெட்டு, இடைவெட்டு, செவிவெட்டு எனப் பலவுமுண்டு.

**சிலம்பாட்டம் பயிற்றுவிக்கப்படும் இடமும் பயிலும் முறையும்**

சிலம்பாட்டம் பயிற்றுவிக்கப்பட்ட இடம் குறித்து அகத்தியர் கம்பு சூத்திரம் கீழ்வருமாறு கூறுகிறது.

**"இருவென்று அமித்தாரசங் கொள்ளும்போது**
**இன்பமுடன் சிலம்பிலிருக்கும் வகையைச் சொல்லி**
**கருவென்ற புஜபிலமும் கலந்து சொல்லி**
**திருவென்று மந்திரத்தின் தீர்க்கம் சொல்லி**
**சிவகைலை பொதிகையில் போய் இரு என்றார்கள்**
**குழுவென்ற பொதிகையில் இருந்து கொண்டு**
**குருவான குருவெடுத்து ஆடினேனே"**

மேற்குறிப்பிட்ட நூற்பாவின் அடிப்படையில் திருநெல்வேலி மாவட்டம், பொதிகை மலையடிவாரத்தில் அமைந்துள்ள அகத்தியர் குடில் மற்றும் கல்யாண தீர்த்தம் பகுதிகளில் சிலம்பம் உட்பட பலகலைகள் பயிற்றுவிக்கப்பட்டதாக அறியமுடிகிறது.

சிலம்பம் பயிலும் முறையாக நெட்டையத் தேவர் அவர்கள் "கலைபயில ஆர்வமுள்ள மாணாக்கர்கள் பெற்றோருடன் தக்க காலத்தில் ஆசிரியரிடம் செல்லவேண்டும். தாழ்ந்து பணிந்து வணங்கி

அடிதொட்டு நின்று தம் விருப்பத்தினை தெரிவிக்க வேண்டும். ஒப்புதல் பெற்றவுடன் நல்லநாள் பார்த்து வளர்பிறை நாளிலோ, அமாவாசை நாளிலோ, பௌணர்மி நாளிலோ, குருவுக்குரிய நாளிலோ ஏதோ ஒருநாள் தட்சணையுடன் சென்று பயிலத் தொடங்குதல் வேண்டும். ஆசிரியரை, கம்பு எடுக்கும் போதும், ஆடி முடிக்கும் போதும் வணங்கவேண்டும். ஆசிரியரின் குணத்திற்கேற்பப் பழகி, கலை நுணுக்கங்களை ஆசிரியர் கற்றுக்கொடுத்த பிறகே பயிலவேண்டும். ஆர்வத்தோடு பழகி, நன்கு மனதில் பதியவைத்து பயிற்சி மேற்கொள்ளல் வேண்டும். சிலம்பாட்டப் பயிற்சிக் களத்தில் கலையைத் தவிர தேவையற்ற விவாதங்கள் கூடாது. பயிற்சிநேரம் முடிந்தவுடன் குரு, 'போ' என்றவுடன் பின்னரே செல்ல வேண்டும்.

மேலும், சிலம்ப உடைகள், பயிலும் மாணவனுக்கும் தலைமை மாணவனுக்கும், ஆசிரியனுக்குத் தனித்தனி உண்டு.

"வீமன் வழி குறுந்தடிச் சிலம்பம்" என்ற நூலில் மாணவன் ஆசானிடம் கம்பை வாங்கும்போது தொழுது வாங்கவேண்டும் என்பதைக் கீழ்க்காணும் நூற்பா,

**"சாற்றியே ஓட்டத்தடியது முறித்து**
**அடவுடன் குருவைத் தொழுது தடியை வாங்கே"**

என்று கூறுகிறது. "அடவுடன் குருவைத் தொழுது" என்பதில் சிலம்பாட்டத்திற்கும் தரவுகள் உண்டு என்பது வெளிப்படை. இவற்றோடு 'பாவலா செய்தல்' இன்றியமையா இடம்பெறுகின்றது. எதிரிகளின் தாக்குதலைத் திறமையாகச் சமாளிக்க, முன்னேற்றுதல், பின் இறங்குதல், பிரிதல், துள்ளுதல் போன்ற பயிற்சிகள் இவற்றுள் அடங்கும்.

தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் எனும் இவ்ஆய்வு கட்டுரையின் வாயிலாக பலவகை நிகழ்த்துக் கலைகளின் பெயர்களைச் சுட்டிக்காட்டிச் சிலம்பாட்டத்தினை விரித்துரைத்தக் காரணம் என்னவென்றால், பழமைவாய்ந்த பாரம்பரியக் கலையான இக்கலை 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் மறைந்துபோன கலையாக இருந்தது. தற்போதைய 21ஆம் நூற்றாண்டில் இக்கலை மறுமலர்ச்சி பெற்று, நவீனத்துடன் இசைநயத்துடன் பொது ஊடகங்களின் வாயிலாகப் பரவத் தொடங்கியுள்ளது. இன்றைய சூழலில் அனைத்து விழாக்களிலும் கலையைப் பரவி வந்தாலும் போதிய அளவில் நகரப்புறவாசிகளிடம் போய்ச்சேராமலேயே இருப்பில் நிற்கிறது. இக்கலையை குறையாகக் கற்று சிலம்பாட்டக் கலைஞர்களின் வாழ்வியலும் வினாக்குறியோடு இம்மண்ணில் வளம் வந்து கொண்டேயிருக்கிறது.




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4

அறம் பதிப்பகம்